2. செங்கல்பட்டு மாவட்டம் மறைமலை நகரிலுள்ள அரசு நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக உயர்த்துவதற்காக அந்த வட்டார பொது மக்கள் (பொதுவாக உயர்நிலைப் பள்ளிகள் தொடங்குவதற்கு நிறைவேற்றப்பட வேண்டிய நிபந்தனைகளின் அடிப்படையில்) கட்டிட பங்குத்தொகை ரூ. 2,500–ம் பொது மக்கள் பங்குத் தொகை ரூ.10,000-ம் ஏற்கெனவே செலுத்தியுள்ளனர். மற்றும் போதுமான காலி இடம் போன்ற வசதிகளும் இருப்பதாகத் தெரிய வருகிறது.

3. 1986–87ஆம் ஆண்டு உயர்நிலைப்பள்ளிகள் தொடங்குவதற்காக மாநிலம் முழுவதிலும் இருந்து வந்திருந்த கருத்துருக்களை ஆய்வு செய்து அவ்வாண்டு தொடங்க வேண்டிய உயர்நிலைப்பள்ளிகள் பட்டியலை முடிவு செய்யும்பொழுது மேற்சொன்ன பள்ளியைச் சேர்க்க இயலாமல் போய்விட்டது.

4. எனினும் இனிவரும் ஆண்டுகளில் தொடங்க இருக்கும் உயர்நிலைப்பள்ளிகளின் பட்டியலை அரசு முடிவு செய்யும்பொழுது (ஏனைய இடங்களில் தேவைகளுடன்) மறைமலைநகரின் தேவையும் கருத்தில் கொள்ளப்படும்.

திரு. டி. எம். வெங்கடாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே .. ..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் இதிலே கேள்வி கேட்க முடியாது.

(ஈ) திண்டுக்கல் தொகுதி தாடிக்கொம்பு சௌந்திரராஜப் பெருமாள் கோயில் திருப்பணிகள்.

திரு. ஆ. பிரேம்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தமிழகத்திலேயே மிகத் தொன்மையான அழகிய, மிகச் சிறந்த சிற்பங்களை உடைய திண்டுக்கல் தொகுதி தாடிக்கொம்பு அருள்மிகு சௌந்திரராஜப் பெருமாள் கோயிலினுடைய சுற்றுச் சுவர்களும் மற்றும் சில சுவர்களும் மிகவும் பழுதடைந்து விழுந்துவிடும் நிலையிலுள்ளது பற்றியும், அந்தச் சிற்பங்களுக்குப் பாதுகாப்பு இல்லாத நிலை குறித்தும்'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்

[திரு. வி.வி. சுவாமிநாதன்] [1987 ஏப்ரல் 1

அறிக்கை.

அண்ணா மாவட்டம், திண்டுக்கல் வட்டம், தாடிக்கொம்பு கிராமம், அருள்மிகு சௌந்திரராஜப்பெருமாள் திருக்கோவில் வரலாற்றுச் சிறப்பு மிக்க தொன்மை வாய்ந்த ஆலயமாகும். இத்திருக்கோவில் திண்டுக்கல்—கரூர் நெடுஞ்சாலையில், 10 கிலோ மீட்டர் தொலைவில், குடகனாற்றின் தென்கிழக்குப் பகுதியில் அமைந்துள்ளது. இத்திருக்கோவில் 1538-ல் விஜயநகர மன்னன் அச்சுத தேவராயரால் கட்டப்பட்டது.

2. அருள்மிகு சௌந்திரராஜப்பெருமாள் திருக்கோவிலில் உள்ள பழுதுபட்டுள்ளதும், வெடிப்புள்ளதுமான திருமதில் சுவர் களுக்கு பக்கத்துணையாக பாதுகாப்பு சுவர் (Bu tress Wall) கட்டவும், இதர திருப்பணி வேலைகளை மேற்கொள்ளவும், இந்து சமய அறநிலையத்துறை மதுரை துணை ஆணையர் செயல்முறை ந.க. 2762/87/அ3, நாள் 20—2—1987-ல் திருப்பணிக் குழு அமைக்கப்பட்டுள்ளது. மேலும், இத்திருக்கோவிலில் உள்ள சிற்பங்களை சுத்தம் செய்து பாதுகாப்பு அரண் அமைக்க திருப் பணிக்குழுவினரால் ஏற்பாடு செய்யப்பட்டு, நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது.

திருப்பணி செய்யப்பட திட்டமிடப்பட்டுள்ள, திருப்பணி வேலைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

(அ) சுற்று மதில் சுவர் கட்டுதல்,

(ஆ) வெடிப்பு ஏற்பட்டுள்ள திருமதில் செப்பனிடுதல்,

(இ) சக்கரத்தாழ்வார் சன்னதி மராமத்து செய்தல்,

(ஈ) கலை வேலைப்பாடுடைய சிற்பங்களுக்குப் பாது காப்புஅரண் அமைத்தல்.

(உ) முன் நுழைவு மண்டபம் கட்டுதல்,

(ஊ) கிணற்றைத் தூரெடுத்து குழாய் இணைப்புக் கொடுத்தல்,

(எ) ராஜகோபுரம் வர்ணம் பூசுதல்,

(ஏ) மண்டபத்தில் மேல் தளம் செப்பனிடுதல்,

(ஐ) பிரகாரம் சுத்தம் செய்தல்,

(ஒ) குடிநீர் வசதி செய்தல், மற்றும்

(ஓ) சில்லரை மராமத்து வேலைகள்.

திரு. ஆ. பிரேம்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் திருப்பணிக்குழு அமைத்து அதன் மூலம் அந்த வேலை செய்யப்படும் என்று சொல்லப்பட்டிருக் கிறது. அதற்காக அரசுக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள் கிறேன். அந்தத் திருப்பணிக் குழுவில் யார் யாரை உறுப்பினர்

களாகச் சேர்த்திருக்கிறார்கள் அந்தப் பகுதியில் உள்ள முக்கிய ஸ்தர்களையும் அந்தப் பகுதியின் சட்டப் பேரவை உறுப்பினரையும் சேர்த்திருக்கிறார்களா என்ற விவரத்தை அறிய விரும்புவதோடு எவ்வளவு காலத்திற்குள்ளாக அந்தத் திருப்பணியை முடிக்க வேண்டும் என்றும், அந்தப் பணிக்காக எவ்வளவு செலவாகும் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்றும் விவரம் தரப்படுமா என்றும் அறிய விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திருக்கோயிலின் மொத்த வருமானம் ரூ.31,573–00 ஆகும். இந்தத் திருப்பணிக் குழுவினர் தாம் அங்குள்ள சம்பந்தப்பட்ட அறநிலையத்துறையின் துணை ஆணையரைப் பொருளாளராக வைத்து, விவர அறிக்கையில் சொல்லப்பட்டுள்ள 12 விதமான ஐயிட்டங்களையும் நிறைவேற்ற என்ன செலவு ஆகும் என்று மதிப்பீடு செய்து அறநிலையத் துறை ஆணையாளரிடம் அனுமதி பெற வேண்டும்.

(உ) புதூர் நாடு மலைவாழ் பெரும் பலநோக்குக் கூட்டுறவு சங்கக் குறைபாடுகள்.

***திரு. எஸ். பி. மணவாளன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வடஆற்காடு மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், ஐவ்வாது மலை, புதூர் நாடு மலை வாழ் மக்கள் பெரியளவு பல நோக்கு கூட்டுறவு சங்கம் முறையாகச் செயல் படாததால் மலைவாழ் மக்களுக்கு அரசின் திட்டங்கள், கடன் வசதி, அத்தியாவசிய உணவுப் பொருட்கள் கிடைக்காமல் இருக்கிற நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

புதூர் நாடு பெரும் பலநோக்குக் கூட்டுறவு சங்கம் 24-3-78 அன்று துவக்கப்பட்டு நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றது. இச்சங்கத்திலுள்ள மொத்த உறுப்பினர்கள் எண்ணிக்கை 3,187 ஆகும். இவர்களில் பழங்குடியினர் 3,183 பேர் உறுப்பினர்களாக உள்ளனர், புதூர் நாடு எல்லையில் உளள அனைத்து பழங்குடி குடும்பங்களும் சங்கத்தில் உறுப்பினர்களாகச் சேர்க்கப் பட்டுள்ளனர். பழங்குடியினருக்கு அரசு அளித்து வரும் சலுகைகள்